

JOTHI PICTURES LTD.
present
JOTHI
IN TAMIL
மேல்பார்வை—
ராஜா சந்திர சேகர
டைரெக்டர்—
T.R. ரகுநாத்
பாடல்கள்—
மாரியப்பஸ்வாமிகள்
ஜோதி
K.A. முத்து பாகவதர்
N.S. கிருஷ்ணன்
P.G. வெங்கடேசன்
மதுரை A. சுந்தரம்
T.A. மதுரம்
ஸ்ரீ ராமலிங்கஸ்வாமிகள்

# நடிகர்கள்

| | | |
|---|---|---|
| P. G. வெங்கடேசன் | ... | சிவயோகியார் |
| V. B. ராமையா | ... | ராமைய பிள்ளை (தகப்பனார்) |
| மதுரை மிஸ் A. சுந்தரம் | ... | சின்னம்மை (தாயார்) |
| V. நடராஜ் | ... | சபாபதிபிள்ளை (அண்ணனார்) |
| P. S. கிருஷ்ணவேணி | ... | பாப்பாத்தியம்மாள் (அண்ணியார்) |
| மாஸ்டர் ராமுடு | ... | முதல் இராமலிங்க சுவாமி |
| ,, மஹாதேவன் | ... | இரண்டாவது இராமலிங்க சுவாமி |
| K. A. முத்து பாகவதர் | ... | மூன்றாவது இராமலிங்க சுவாமிகள் |
| ராம லக்ஷ்மி | ... | தனகோடி அம்மாள் (மனைவி) |
| M. S. கண்ணம்மாள் | ... | (சகோதரி) உண்ணாமுலை அம்மாள் |
| சரவணபவானந்தர் | ... | தொழுவூர் வேலாயுதமுதலியார் (பிரதம சீடர்) |
| N. S. கிருஷ்ணன் | ... | பூவலிங்க பிள்ளை |
| T. A. மதுரம் | ... | வெள்ளையம்மா |
| K. S. சங்கரய்யர் | ... | வைதீக பிராமணன் |
| M. R. சாமிநாதன் | ... | அமாசி (பறையன்) |
| K. K. சௌந்தரம் | ... | முத்து ராக்கு |
| மாஸ்டர் முத்து | ... | பிச்சைக்காரப்பையன் |
| B. கோபால் | ... | இரண்டாவது தீக்ஷிதர், குருடன் |
| சாமா ஐயர் | ... | முதல் தீக்ஷிதர் |
| M. B. சுப்ரமணியம் | ... | பரசுராம பிள்ளை |
| K. S. சங்கரமூர்த்தி | ... | உபாத்தியாயர் |
| K. S. வேலாயுதம் | ... | பூசாரி |
| H. S. டாக்கர் | ... | சோமசுந்தர செட்டியார் |
| S. R. சாமி | ... | சபாபதி முதலியார் |
| M. G. சக்கரபாணி | ... | ஜமீன்தார் |
| T. V. ஜனகம் | ... | ஜமீன்தாரிணி |

# ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின்

## கதைச்சுருக்கம்

கிராம குடிகள் வில்லுப்பாட்டு பாடுகின்றனர். அப்பாட்டில் அவர்கள் வழிபடும் கிராம தேவதையின் பிரதாபங்களும், அவைகளால் ஏற்படும் நன்மைகளும் எடுத்துரைக்கப்படுகிறது. இதையறிந்த அம்பலவாணர் ஒரு சிவயோகியாக அவ்விடம் வருகிறார். இவ்வுலகம் சீர்திருந்துமோ அல்லது சீர்திருத்த வருபவரது வாழ்நாளை வீண் நாளாகச் செய்துவிடுமோ என்று அவர் வருந்துகிறார்.

சிவயோகியாருடைய வருந்துதல் காரணமாகவே மருதூர் ராமய்ய பிள்ளை அவர்கள் மனைவி சின்னம்மையார் கர்ப்பத்தில் உத்தமக்குழந்தை ஒன்று பிறக்கிறது. அக்குழந்தைக்கு இராமலிங்கம் என்று திருநாமம் இடப்படுகிறது.

ஓராண்டு குழந்தையாக இருக்கும்பொழுதே தில்லை அம்பலவாணருடைய தாண்டவ தரிசனத்தைக் கண்டு பரவசமடைகிறது. ராமய்ய பிள்ளை இறந்துபோகவே ஏக குடும்பமாய் இருந்தவர்கள் இரண்டு பிரிவுகளாகி சென்னையிலும் பொன்னேரியிலுமாக வசித்து வருகிறார்கள். சென்னையிலே வசித்து வரும் சபாபதி பிள்ளை, மனைவி பாப்பாத்தியம்மாள் ஆகியவர்கள் ஆதரவில் இராமலிங்கம் வளர்ந்து வருகிறார்.

படிப்புக்காக பள்ளிக்கு அனுப்புகிறார்கள். பிள்ளைப் பெருமானோ பொய்க் கல்வியை விரும்பாமல் வேலுமயிலுந்துணை என்ற மெய்க்கல்வியையே விரும்புகிறார்.

இராமலிங்கம் ஓதாதுணர்வானென்று பொன்னேரியிலுள்ள சின்னம்மையாருக்கும் சென்னையிலுள்ள பாப்பாத்தி அம்மாளுக்கும் அசரீரியால் அறிவிக்கப்படுகிறது.

உண்மை இதுவென்று புரிந்துகொள்ளாத ஒரு உபாத்தியாயரும் உடன் பிறந்த தமயனாரும் இராமலிங்கத்தை பள்ளியிலிருந்தும் க்ரஹத்திலிருந்தும் அடித்து துரத்திவிடுகிறார்கள். வேறு கதியின்றி கந்தகோட்டத்திலுள்ள கந்தவேளையே தஞ்சமடைகிறார்

சிரார்த்ததினம்; பலரும் சாப்பிடுகிறார்கள்; சமையல் அறைக்குள் பாப்பாத்தி அம்மாள் மட்டும் பிள்ளைப் பெருமான் வந்து சாப்பிடுவதற்கு இல்லையே என்று வருந்துகிறாள் அன்று காலைமுதல் ஆகாரமின்றி பசியால் பரிதபித்து புழக்கடை வழியாக வீட்டினுள் நுழைகிறார் றாமலிங்கம்.

மேன்மாடியிலுள்ள தனியறைக்குள் நிலைக்கண்ணாடி முன் கண்மூடி தியானிக்க கருணைக்கந்தவேள் கண்ணாடியில் காக்ஷி கொடுத்து மறைகிறார்.

தான் ஜுரத்துடன் இருப்பதால் தனக்கு பதிலாக கதா காலக்ஷேப வீட்டிற்கு ராமலிங்கம் நீ சென்று கற்பூர தீபாராதனை காட்டிவா என்கிறார் சபாபதி பிள்ளை.

மூன்று நாட்களாகத் தொடர்ந்து (உலகெலாம்) என்றே ஒரே ஒரு சொல்லுக்கு விண்மாரி என சொன்மாரி பொழிந்த வண்ணமிருக்கிறார் பிள்ளை பெருமான். சபாபதி பிள்ளை மறைவிலிருந்து கேட்டுத்தம்பிப்பெருமானாரை மகிமை செய்கிறார். திருஒற்றியூரில் வடிவுடைமாணிக்க வல்லியாருடையவும் தியாகேசப்பெருமானாருடையவுமான சேவாமகத்துவத்தில் ஈடுபட்டிருந்த காலங்களில் பரம உத்க்ருஷ்டமான புத்தகங்கள் பலவற்றை இயற்றுகிறார்.

இக்காலங்களில்தான் ஐயா அவர்கள் ராமலிங்க சுவாமிகள் என்று நாமாபிஷேகப் படுத்தி அழைக்கப்படுகிறார் இரு மொழிப்புலவர் தொழுவூர் வேலாயுத முதலியாரும் சிஷ்யராகின்றார்

சிவயோகியாருடைய சீரிய சொற்குடன்பாடாகி திருமணத்தை செய்து கொண்ட மறுநாட் காலேயே வெளியேறி திருவொற்றியூரை அடைகிறார்.

பாடி யென்னும் திருவலிதாய க்ஷேத்திரத்தில் சிவலிங்கத்தின் பேரில் சுற்றி யிருந்த கந்தைத்துணியை ஜரிகைத் துப்பட்டாவாக தமது அருட்சக்தியால் மாற்றி அருளுகின்றார் சுவாமிகள்.

அழைப்புக்கிணங்கி ஒரு கல்யாண வீட்டுக்குள் சுவாமிகள் நுழைய வாயில் காப்பவன் தடுத்துவிட எதிர்வீட்டுத்திண்ணையில் இருந்து பாட, பாடலுக்கு தக்கபடி கல்யாண வீட்டுக்குள் அபிநயம் பிடித்துக்கொண்டிருப்பவள் ஆடத்தொடங்கி விடுகிறாள்.

தம்மை ஈன்ற சின்னம்மையார் காலகதியடையவே பிணஞ்சுடுவது அபாராதம் சமாதி செய்யுங்கள் என்று உலகத்தையே வற்புறுத்துகின்றார் சுவாமிகள். அதுகாறும் சுவாமிகளால் பாடப்பெற்றுள்ள தோத்திரப்பாடல் களெல்லாம் சிதம்பர க்ஷேத்திரத்தில் அருட்பாவென்னும் திருப்பெயருடன் வெளிவரு கிறது. சுவாமி அவர்கள் தில்லை நடராஜப் பெருமானை கட்டி ஆலிங்கனம் செய்யப் போக அருகிலிருந்த தீக்ஷதர் அடிகளை பிடித்துத் தள்ளிவிடுகிறார்.

"வருவார் அழைத்துவாடி வடலூர் வட திசைக்கே வந்தால் பெறலாம் நல்ல வரமே" என்று சுவாமிகள் அம்பலத்தரசருக்கு தூது அனுப்புகிறார். சுவாமிகள் ஓர் இரவு கருங்குழியில் தண்ணீரை ஊற்றி விளக்கெரியச்செய்கிறார். வீட்டு எஜமானியோ தண்ணீர் என்கிறாள் விளக்கு நின்றுவிட சுவாமி எண்ணெ என்கிறார் விளக்கு எரிகிறது.

வேட்டவலம் ஜமீன்தாருடைய மைத்துனன் பூவலிங்கம் அமாவாசை என்னும் பறையனிடம் குடி வார பாக்கி நெல் அளக்கும்படிக் கட்டாயப்படுத்துகிறான்.

பறையன் ஒருவனுக்கு தருமச்சாலையில் அன்னமிட மறுக்கிறார்கள் சுவாமி அவர்கள் அவனை உள்ளே அழைத்துப்போய் பரிமாறச்சொல்லுகிறார் அதனால் அங்கு நடப்பதை சொல்லியோ எழுதியோ முடியாது நேரில் காணுங்கள்.

அமாவாசையின் மைத்துனி வெள்ளையம்மாளை பூவலிங்கம் பலாத்காரம் செய் கிறான். பிச்சைக்காரக்கிழவன் ஆக்ஷேபிக்கிறான். பூவலிங்கம் அவனைக் கொன்று விடு கிறான். காளிதேவிக்கு ஆட்டுக்கிடா ஒன்றை சில மூட மதிகள் பலியிடுவதை சுவாமி அவர்கள் அறிவு புகட்டித் தடுத்துவிடுகிறார்.

அனாதைப்பையனை அமாவாசை காப்பாற்றுகிறான் தன் வீட்டில் பூவலிங்கத்தை உபசரிக்கிறான். பூவலிங்கம் வெள்ளையம்மாளை சரவிக்கிறான்; ஜமீன்தாருடைய இரு மனைவிகளின் தீராத நோயும் பேயும் சுவாமிகளைக்கண்டதும் பறந்தோடுகிறது. சுவாமிகளின் உபதேசத்தைக் கேட்டதும் பறைக்குலப்பெண் வெள்ளையம்மாளைக் கல்யாணம் செய்து கொள்வதே சரியென அவளுடன் பூவலிங்கம் வேற்றூருக்குப் போகிறான்

சிதம்பரம் ஆனித்திருமஞ்சனத்திருவிழா வைபவத்தை தருமச்சாலையிலுள்ள திரை மறைவிலேயே அன்பர்கள் கண்டு களிக்கிறார்கள். பூவலிங்கத்தை பாம்பு கடித்து விடவே வடலூர் தருமச்சாலையிலுள்ள கிணற்றருகில் கொண்டுவந்து போட்டு புலம்பு கிறாள் வெள்ளையம்மாள். சர்ப்பம் தீண்டி யிறந்த பூவலிங்கத்தை அய்யா அவர்கள் உயிர்ப்பிக்கிறார்கள்.

மிகுதியைத் திரையில் கண்டு களியுங்கள். சுபம்! சுபம்!

உ

அருட்பெருஞ்ஜோதி

“ஜோதி பிக்சர்ஸ்”



# ஜோதி

அல்லது

## ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின் பாடல்கள்

---

காமிக்

ஓடிவாரும் மாடனே—பாடினோமே வாருமே
ஓடிவாரும் மாடனே—பாடினோமே வாருமே

என்ன பிளை என்ன குத்தம்
ஏது செய்தோமையாவே

மன்னுயிரைக் காக்க வந்த —மாட ஐயாவே
எங்கள் குறைதன்னைத்தீர்க்க—வாடா மெய்யாவே

ஆசைவைப்பூ பூசைவைப்பூ
அத்தனிக்கு மேகருப்பு

மீசை முறுக்கிவர —ஏனோ வீராப்பு
உன்னுடைய பூசைக்கிந்த—பூராமாங்தோப்பு

சாமி உன்னையே அளைக்கிறோம்
பறச்சாதியின்னுதா முளிக்கிறோம்

ராகம்-ஹிந்துஸ்தான் காபி] பல்லவி [தாளம்-ரூபகம்

விபவ ஸுகுண தேவா
வேதபுரா ஞகமாத (விபவ)

சரணம்

ஞானமில்லா மாதவமே
நாடு மனிதர் பாடவமே
நலிவதிதா மோசிவமே
தயவில்லாத பலி—யாலே—தொழு—வாரோ (விபவ)

---

ராகம்-கானடா] பல்லவி [தாளம்-ஆதி

ஸ்ரீ கணநாதா ஜெகம்புகழ் நீதா
தேவர் தொழும் பொற்பாதா
சேயெனக்கருள் தாதா (ஸ்ரீகண)

அனுபல்லவி

யோகமும் நீயே—செயும்
யாகமும் நீயே—பல
போகமும் மூஷிக—வாகனநீயே ஜெய (ஸ்ரீகண)

---

ராகம்-கரஹரப்ரியா] [தாளம்-ஆதி

சுத்த சன்மார்க்க சித்தமோடனுபவம்
இத்தரணியில் வர எத்தனை நாட் செலுமோ (சுத்த)

சத்தியமான வித்தக ஞானம்
சகல ஜீவர்கட்கும் சமரஸமன்றோ (சுத்த)

---

ஸிந்து பைரவி] பல்லவி [தாளம்-ஆதி

எனதாருயிர் நாயகரெனைப் பிரிந்தார்
இனியென் செய்திடுவேன் (என)

அனுபல்லவி

தனயர்களும் யானுந்தனியாக
தயங்கிடவும் விதியோ ஜெகதீசர் (என)

சரணம்

அடிமரம் போனல் கிளைகளெவ்வாறும்
அதுபோலே தம் அரும்புதல்வரை விட்டு
படிதனில் ஆசை முடிந்ததென்றேகினர்
பாலர்கள் வாழ்வேதாகுமோ அறியேன் (என)

---

ராகம்-சக்ரவாகம்] [தாளம்-ஆதி

நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
நிலனுண்டு பலனு முண்டு
நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு கதிகொண்ட
நெறியுண்டு நிலையு முண்டு
ஊருண்டு பேருண்டு மணியுண்டு பணியுண்டு
உடையுண்டு கொடையு முண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தமுறும்
உளமுண்டு வளமு முண்டு
தேருண்டு கரியுண்டு பரியுண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவு முண்டு
தேனுண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானமுண் டாயி லரசே
தாருண்ட சென்னையிற் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத்துய்யமணி உண்முகச்சைவமணி
ஷண்முகத் தெய்வமணியே.

---

ராகம்-நவரஸ சந்திரிகா] [தாளம்-ஆதி

தடித்த ஓர் மகனைத் தந்தையீண்டடித்தால்
தாயுடன் அணைப்பள் தாயடித்தால்
பிடித்தொரு தந்தை யணைப்பன் இங்கெனக்கு
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திருமேனி அம்பலத்தாடும்
புனிதநீயாதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திட வேண்டும்
அம்மையப்பா இனி ஆற்றேன்

ராகம்-தோடி விருத்தம்—ராகமாலிகை

கற்றமேலவரொடும் கூடி நில்லேன் கல்வி
கற்கும் நெறிதேர்ந்து கல்லேன்
கனிவு கொண்டுனது திருவடியை ஒருகனவிலும்
கருதிலேன் நல்லன் அல்லேன்

ராகம்-கல்யாணி

குற்றமே செய்வதென் குணமாகும் அப்பெரும்
குற்றமெல்லாம் குணம்எனக்
கொள்வது நின் அருள் குணமாகும் என்னில் என்
குறை தவிர்த்தருள் புரிகுவாய்

ராகம்-காம்போதி

பெற்றமேல் வருமொரு பெருந்தகையின் அருள்உருப்
பெற்றெழுந் தோங்கு சுடரே
பிரணவாகார சின்மய விமல சொரூபமே
பேதமில் பரப்பிரம்மமே

ராகம்-ஷண்முகப்ரியா

தற்றகைய சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

---

ராகம்-மாண்டு] [தாளம்-கண்ட சாப்பு

வன்பெரு நெருப்பினை புன்புழுப்பற்றுமோ
வானை ஒருமான் தாவுமோ
வலியுள்ள புலியை ஓர் எலி சீறுமோ பெரிய
மலையை ஓர் ஈச்சிறகினல்
துன்புற அசைக்குமோ வச்சிரத்தூணொரு
துரும்பினல் துண்டமாமோ
சூரியனை இருள்வந்து சூழுமோ காற்றில் மழை
தோயுமோ இல்லை அதுபோல்
அன்புடைய நின்னடியர் பொன்னடியை யுன்னுமவர்
அடிமலர் முடிக்கணிந்தோர்க்கு
அவல முறுமோ காமம் வெகுளி யுறுமோ மனத்து
அற்பமும் விகற்ப முறுமோ
தன் புகழ்செய் சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

ராகம்-பாஹீஸ்வரி] [தாளம்-ஜம்பை

நான்கொண்ட விரதம் நின் அடியலாற் பிறர்தம்மை
நாடாமையாகும் இந்த
நல் விரத மாங்கனியை இன்மையெனு மொருதுட்ட
நாய் வந்து கவ்வி யந்தோ
தான் கொண்டு போவதினி யென்செய்வே னென்செய்வேன்
தளராமை யென்னுமொருகைத்
தடிகொண்டடிக்கவோ வலியிலேன் சிறியனேன்
தன்முகம் பார்த்தருளுவாய்
வான் கொண்ட தெள்ளமுத வாரியே மிகு கருணை
மழையே மழைக்கொண்டலே
வள்ளலே யென்னிருகண்மணியே யென் இன்பமே
மயிலேறும் மாணிக்கமே
தான்கொண்ட சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

---

ராகம்-ஸஹானு] [தாளம்-ஆதி

உடுக்கவோ ஒரு கந்தைக்கு மேலில்லை
உண்ணவோ உணவிற்கும் வழியில்லை
படுக்கவோ பழம்பாய்க்கும் கதியில்லை
பாரில் நல்லவர் பாற் சென்று பிச்சைதான்
எடுக்கவோ திடமில்லை என்பால் உனக்கு
இரக்க மென்பதும் இல்லை உயிரைத்தான்
விடுக்கவோ மனம் இல்லை என் செய்குவேன்
வெண் பிறைச்சடை வித்தக வள்ளலே

---

விருத்தம் ராகம்-செஞ்சுருட்டி

பண்ணுமுன் அருள் புகழைப் பாடுகின்றார்
பணிகின்றார் நின்அழகை பார்த்துப் பார்த்து
கண்ணார உளங்குளிரக் களித்தா னந்தக்
கண்ணீர் கொண்டாடுகின்றார் கருணை வாழ்வை
எண்ணுநின் றனைஎன்தாய் என்தாய் என்தாய்
என்கின்றார் நின்அன்ப ரெல்லாம் என்றன்
அண்ணுநா னொருபாவி வஞ்ச நெஞ்சால்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ

ஹிந்துஸ்தான் காபி] [தாளம்-ஆதி

பார்க்கின்றிலேயே பன்னிருகண்
படைத்தும் எளியேன் பாடலைத்தும்
தீர்க்கின்றிலேயே என்னையான்
செய்வேன் சிறியேன் சீமானே
போர்க்குன் றொடுசூர் புயக்குன்றும்
பொடிசெய் வேற்கை புண்ணியனே
சீர்க்குன் றெனுநல் வளத்தணிகை
தேவே மயிலூர் சேவகனே

---

ராகம்-யமுனா கல்யாணி] [தாளம்-ஆதி

சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும்
திகழ் கடப்பத்
தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத்
தாள்களும் ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலும் நற்கோழிக்
கொடியும் அருள்
கார்கொண்ட வண்மை தணிகா சலமுமென்
கண்ணுற்றதே.

---

ராகம்-கௌரி மனோஹரி] பல்லவி [தாளம்-ஆதி

என்ன அபசாரம் செய்தேன்
ராமலிங்கம் உனக்கு (என்)

அனுபல்லவி

தன்னலமில்லாத ஸமரஸ ஞானிநின்
தன்மையறியாமல் என்சின்னமதியாலே (என்)

சரணம்

ஓதாதுணர்வாயென உரைத்த திருவருளை
உலகம் அறியச்செய்தாய் உத்தமனே உனை
ஆதாரமில்லாமலும் அன்னமில்லாமலும்
அலையச்செய்தேன் தண்டித்தேன் அருமைச் செல்வமே (என்)

ராகம்-சாரங்கா] [தாளம்-ரூபகம்

அருள்ஜோதி தெய்வமெனை யாண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற வானந்தத்தெய்வம்
பொருட்சாரு மறைகளெலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வமுயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கியொளி யீந்தருளுந் தெய்வம்
எண்ணியநானெண்ணியவாறெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாட லுவந்தெனையுஞ் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்

---

ராகம்-பிலஹரி] [தாளம்-ஆதி

தாயே மிகவும் தயவுடையாளென சாற்றுவர் இச்
சேயேன் படும் துயர் நீக்க என்னே உளஞ்செய்திலையே
நாயேன் பிழை இனி நாடாது நல்லருள் நல்க வரு
வாயே எம் ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே

---

ராகம்-இந்துஸ்தான் மாண்டு] பல்லவி [தாளம்-ஆதி

பிரும்மன் எழுத்தினுல் ஜகமதே
நடந்தாகும் மாற்றிடலாகா (பிரு)

அநுபல்லவி

மாற்றிடலாகா தெனிலிந்த ஜீவன்
யாதே செய்யலாம் அதனுலே (பிரு)

சரணம்

கருமமகலவே தானுயர்ந்தோர்கள்
கண்டனரிந்த இல்லற வாழ்வே
காமியமா மிதிலும் நீ யாவும்
காண்பாய் நிஷ் காமியமாய் (பிரு)
துவேஷமில்லை யெதுவும் மயங்கிட வேண்டாம்
திருமணமே செய்வாயே
தீனதயாளன் ஜகதாதாரன் சேவடியை மறவாதே நீயே
திருமணமே செய்வாயே (பிரு)

ராகம்-ஹரிகாம்போதி] [தாளம்-சாபு

புண்ணைக்கட்டிக்கொண்டேயதன் மேலொரு
புடவை கட்டிப் புதுமைகள் காட்டிடும்
பெண்ணைக்கட்டிக்கொள்வாரிவர் கொள்ளிவாய்ப்
பேயைக்கட்டிக்கொண்டாலும் பிழைப்பர்காண்
மண்ணைக்கட்டிக்கொண்டேயழுகின்ற இம்
மடையப்பிள்ளைகள் வாழ்வினை நோக்குங்கால்
கண்ணைக் கட்டிக்கொண்டு ஊர்வழி போங்கிழக்
கழுதை வாழ்விற் கடையென லாகுமே.

---

ராகம்-மோஹனம்] [தாளம்-ஜம்பை

இந்திரியவய மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்து போய் அரு நரகில் வீழ்வோர்க்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே

---

ராகம்-இந்துஸ்தான் தோடி] [தாளம்-ஆதி

சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தை வினைதொலைத்துன் மொய்கழற்கா ளாக்காதே
நிந்தையுறும் நோயால் நிகழவைத்தல் நீதியதோ
எந்தைநீ ஒற்றி எழுத்தறியும் பெருமானே

(தொகையறு)

பூமாந்தும் வண்டெனநின் பொன்னருளைப் புண்ணியர்கள்
தாமாந்தி நின்னடிக்கீழ்ச் சார்ந்து நின்று ரையோநான்
காமாந்த காரமெனுங் கள்ளுண்டு கண்மூடி
ஏமாந்தே னொற்றி எழுத்தறியும் பெருமானே

சங்குடையான் தாமரையான் தாள்முடியுங் காண்பரிதாங்
கொங்குடைய கொன்றைக்குளிர்ச்சடையாய் கோதையொரு
பங்குடையாய் ஏழைமுகம் பாராது தள்ளி விட்டால்
எங்கடைவே னையா எழுத்தறியும் பெருமானே

---

ராகம்-பீலு] [தாளம்-ஆதி

சிந்தை நின்ற சிவானந்தச் செல்வமே
எந்தையே யெமை ஆட்கொண்ட தெய்வமே
தந்தையே வலி தாயத் தலைவநீ
கந்தை சுற்றும் கணக்கது என் கொலோ

ராகம்-ஹிந்துஸ்தான் பியாக்] [தாளம்-ஆதி

பல்லவி

என்னடீ சொன்னர் என்தோழி—எங்கும்
புகழ் தங்கும் வேலன் (என்)

அநுபல்லவி

உன்னைத்தூதனுப்பினேனே
உத்தமஸத்குணமானே
என்னைக்காதலித்தாலன்றி—அவர்
இன்னல்படுவேன் என்றதற்கு (என்)

சரணம்

வள்ளீ தெய்வயானை போல
மங்கை நான் உத்தமியில்லை—ஆனல்
வஞ்சிக்கும் அறியவர்—தம்
வள்ளலென்றுணர்ந்தேன்—ஆதலால்
உள்ளதை உள்ளவாரே உடல்
பொருள் ஆவி மூன்றும் ஒப்படைத்தேன்
அவர்பால் ஒப்புக்கொண்டாரோ
சொல்வாய் (என்)

---

ராகம்-தோடி] [தாளம்-கண்டஜாதி திரிபுடை

பல்லவி

வடிவேலும் மயிலும் துணையே
மால் மருகன் குகன் திரு (வடி)

அனுபல்லவி

கொடிய அசுரர் முடி பொடி பட விடப்படும் வடிவேல்
நமது பவப்பிணிக்கும் அதுவே ஆதலால்
குருபர முருக சரவணபவ யென—அனுதினம்
செய் மனனம் மேன்மையுடன் மனமே (வடி)

சரணம்

உடல் பொருளாவியு மவனும் என வுணரா
துலகினில் அவமே அலேகுவதேன்
பவபய மகன்றிடவு மிகபரங்களிலும் நலமிகுந்த
உரு வெனவும் அரு வெனவும் உரு வரு வெனவும்
அரு உரு வெனவும் அதிசய முறு பலவித வடிவாய்
அரு மறை புகழ் செய் பிரணவ மெனவுரை
மயிலினில் வருகுவன் விரைவினிலே
உறுதியுட னமரர் பணிசரண மதனில்

ஒருமையுடன் மனது நிலை பெறவே
உருகி, உருகி, அழுது அழுது தொழுதுளம் உடைய
உள இருள் முழுதும் அறவே
உதைய கதிரென நமிறைய வனே
ஒளிபெற வருகுவ னிது நிஜமே
உனதுதவியு மவசிய மனமே
ஜெக ஜால—மொடுயிற்—கவர் கால
நமிடம்—வரும் வேலை—யிலை யறிவை (வடி)

---

விருத்தம் ராகம்-கேதாரகௌளம்

பிறந்தவரை நீராட்டிப் பெருக வளர்த்திடுகின்றீர் பேயரே நீர்
இறந்தவரைச் சுடுகின்றீர்எவ்வண்ணம் சம்மதித்தீர் இரவில்தூங்கி
மறந்தவரைத் தீமூட்ட வல்லீரேல் நும்மனத்தை வயிரமான
சிறந்தவரையென புகழச்செய்து கொண்டீர் ஏன்பிறந்து திரிகின்றீரே

---

ராகம்-கேதாரகௌளம்] [தாளம்-ஜம்பை

பானளிக்கும் தேகமிது சுடுவது அபராதமென பகர்கின்றேன் நீர்
சிரம் நெளிக்கச் சுடுகின்றீர் செத்தவர்கள் பற்பலரும் சித்தசாமி
உரனளிக்க எழுகின்ற திருநாள் வந்தடுத்தன ஈதுணர்ந்து நல்லோர்
வரனளிக்கப்புதைத்த நிலை காணீரோ கண் கெட்ட மாட்டினீரே

---

ராகம்-இந்துஸ்தான் கல்யாணி] [தாளம்-ஆதி

பல்லவி

பரனடியே தினம் பணிமனமே—குரு
பணிமனமே நமன் வரும் முனமே

தொகையறு

இருளெனும் இப்பெரும் கடலில்
ஆழ்ந்துமிக்க இளிவடையாது
அருளெனும் நற்கதி அடைவோமே (பர)
அதற்கென் சொற்கேள்

தொகையறு

கல்லாமலும் எல்லாம் கற்றதாகவும் எண்ணி
கருவப்படாது நின்றே
எல்லா நலங்களும் தரும்
அறுமாமுகத் தெந்தையாம் இன்றே (பர)

---

விருத்தம் ராகம்-ஆனந்த பைரவி

காயெலாம் கனியென கனிவிக்கும் ஒரு பெருங்
கருணையமுதே எனக்கு
கண்கண்ட தெய்வமே கலிகண்ட அற்புதக்
காட்சியே கனகமலையே
தாயெலாம் அனைய என் தந்தையே ஒருதனித்
தலைவனே நின் பெருமையை
சாற்றிட நினைத்திட மதித்திட அரிந்திடச்
சார்கின்ற தோறும் அந்தோ
வாயெலாம் தித்திக்கும் மனமெலாம் தித்திக்கும்
மதியெலாம் தித்திக்குமென்
மன்னியமெய் அறிவெலாம் தித்திக்கும் என்னில் அதில்
வரும் இன்பம் என்புகலுவேன்
தூயெலாம் பெற்றநிலை மேலருள் சுகமெலாம்
தோன்றிட விளங்கு சுடரே
துரிய நிலை நடுநின்ற பெரிய பொருளே அருள்
ஜோதி நடராஜகுருவே

---

ராகம்-வாசஸ்பதி] [தாளம்-ஜம்பை

நினைந்து நினைந் துணர்ந் துணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந் தன்பே
நிரைந்து நிரைந் தூற்றெழும் கண்ணீர் அதனல் உடம்பு
நனைந்து நனைந் தருள் அமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்து வனைந் தேத்துதும் நாம் வம்மினுல கியலீர்
மரண மில்லா பெரு வாழ்வில் வாழ்ந் திடலாம் கண்டீர்
புனைந் துரையேன் பொய் புகலேன் சத்தியம் சொல் கின்றேன்
பொற் சபையில் சிற் சபையிற் புகத் தருணம் இதுவே

---

ராகம்-இந்துஸ்தான் ப்யாக்] பல்லவி [தாளம்-ஆதி

வருவாரழைத்துவாடி வடலூர் வட திசைக்கே
வந்தாற் பெறலாம் நல்ல வரமே (வரு)

அநுபல்லவி

திருவார் பொன்னம்பலத்தே செழிக்குங் குஞ்சிதபாதர்
சிவசிதம்பரபோதர் தெய்வச்சபாநாதர் (வரு)

சரணம்

சிந்தை களிக்கக்கண்டு சிவானந்தமதுவுண்டு
தெளிந்தோரெல்லாருந் தொண்டு செய்யப்பரிவுகொண்டு
இந்தவெளியில் நடம் இடத்துணிந்தீரேயங்கே
இதைவிடப்பெருவெளி இருக்குதென்றுலிங்கே. (வரு)

---

விருத்தம் ராகம்-பைரவி

ஏட்டாலும் கேள் அயலென்பாரை
நான் சிரித்து என்னை வெட்டி
போட்டாலும் வேறிடம் கேளேன்
என் ஆணை புறம் விடுத்து
கேட்டாலும் என்னை உடையானிடம்
சென்று கேட்பன் என்றே
நீட்டாலும் வாயுரைப் பாட்டாலும்
சொல்வி நிறுத்துவனே.

---

ராகம்-தேசிகம்] [தாளம்-ஆதி

ஏனெடுத்தேன் பவமே உருவாகிய தேகம்
இதனாலடைந்தேன் பெரும் சோகம்
மானிலத்தே எந்தன் வாட்டம் தவிர்ப்பவர் யாரோ
மதிமயங்குகின்றேன் இது சீரோ

தொகையறு

ஈனகுணத்தோடுலகில் ஏழை என்றும்
பாராமல் இன்னல் செய்தார்
யானெனது தாய் தந்தையற்றவனாய்
அலைகின்றேன் அந்தோ அந்தோ

பாட்டு

நீதியில்லாதவர் நேசத்தினால் வந்த மோசம்
அதை நினைக்க உண்டாகுதாயாசம்

காமிக்

தானிய மணி வெளையும்
தக்கபெரும் வயலெல்லாம்
வானமழை யில்லாமலே
வாடிபோச்சு பயிரெல்லாம்
ஆனதால் குத்தகைக்கு
அளந்து குடுக்க நெல்லுமில்லே
மானமா வாழ்ந்தோமிப்போ
வந்ததடி வகை மோசம்

காமிக்

பூவலிங்கம்—ஆசையுன்மேல் ஆகினேன்
அணைந்து சேர வெட்கமோ (ஆசை)

வெள்ளையம்மாள்—ஐய்யோ—ஆத்தாடி நாமாட்டேன்
நீசஜாதிக்காரிமேலே ஆசைவைக்கலாமா
பேசாதீங்க மச்சாங்கண்டா ஏசிப்பேசுவாரு
எனக்குந்தானசை

பூவலிங்கம்—ஈனஜாதி யேதடி
என்னைமிஞ்சி இங்கே யாரடி

வெள்ளையம்மாள்—ஒஹோ—ஆளைப்பாரு
ஆனை பூனை யின்னு கருப்பை அளிச்சிட்டபொறவு
ஏனோதானோ இன்னுருந்தாளென்னசெய்வபின்னே
ஏழைப்பொண்ணு சொன்னே

---

ராகம்-பகாடி] [தாளம்-ஆதி

மானிட ரேயினி யாகிலுங் கேளீர்
வஞ்சக ஜெகமேல் வாழ்வை நம்பாதீர்
வஞ்சக நினைவே மனதிலெண்ணுதீர் (மானி)

தொகையரு—எல்லாரிடத்தும் இரக்கமே வேண்டும்
இழிவாம் பலியை நீக்கிட வேண்டும்

பாட்டு—இகமே துதிக்கும் சத்தியம் வேண்டும்
இறையோன் பாதமே ஏத்திட வேண்டும் (மானி)

தொகையரு—அன்பே சிவமாம் சமரஸ சன்மார்க்கம்
அறைந்தானிதையேன் மறந்திடலானீர்

பாட்டு—அவனே வருவான் அருட்பெருஞ்ஜோதி
அதையே யாவரும் போற்றுதல் நீதி (மானி)

ராகம்-வசந்தா] [தாளம்-ரூபகம்

ஜோதி ஜோதி ஜோதி—சுயஞ்
ஜோதி ஜோதி ஜோதி—பரம்
ஜோதி ஜோதி ஜோதி—யருள்
ஜோதி ஜோதி ஜோதி—சிவம் (ஜோ)

வாம ஜோதி சோம ஜோதி வான ஜோதி ஞான ஜோதி
மாக ஜோதி யோக ஜோதி வாத ஜோதி நாத ஜோதி
ஏம ஜோதி வியோம ஜோதி யேறு ஜோதி வீறு ஜோதி
ஏக ஜோதி யேக ஜோதி யேக ஜோதி யேக ஜோதி (ஜோ)

ஆதி நீதி வேதனே ஆடல் நீடு பாதனே
வாதி ஞான போதனே வாழ்க வாழ்க நாதனே (ஜோ)

---

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

PRINTED AT JOTHI PRESS G. T. MADRAS.

கதையமைப்பு :

ராவ் பகதூர் P. சம்பந்தமுதலியார்

—

சம்பாஷணை :

C. A. லக்ஷ்மணதாஸ்

—

பாட்டு, சங்கீத டைரக்ஷன் :

மதுரை – மாரியப்ப ஸ்வாமிகள்

—

சீனேரியோ, மேல்பார்வை :

ராஜா சந்திர சேகர்

—

டைரக்ஷன் :

T. R. ரகுநாத்

உதவி டைரக்ஷன் :

R. S. மணி

—

ஸ்டுடியோ :

ஸ்ரீ பாரத் லக்ஷ்மி பிக்சர்ஸ், கல்கத்தா

—

ஒலிப்பதிவு :

A. கபூர்

ஒளிப்பதிவு :

V. V. தாதே

எமது அடுத்த படம்

அருட்பிரகாச வள்ளலார்

அருளிய

# ஆராய்ச்சி மணி

JOTHI PICTURES LTD